REG No. M 2997.

1291

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

Le Rédacteur
S. CANDIAH PILLAI

விவேகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை.

VOL. III புதுவை, தாது வரு ஆவணி மீ உசுஉ (10—9—36) No. 39.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

பாலினை நறுநெய்யாற்பழத்தினிற்பயின்றூட்டி
நூலினன்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினர்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினற்கூற்றுதைத்தான்கணபதிச்சரத்தானே.

நுண்ணியான்மிகப்பெரியானெவ்வுளார்வாயுளான்
தண்ணியான்வெய்யானந்தலைமேலானமனத்துளான்
றிண்ணியான்செங்காட்டங்குடியான்செஞ்சடைமதியக்
கண்ணியான்கண்ணுதலான்கணபதிச்சரத்தானே.

உள் நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 3.

1293

வெளி நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 4.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

VIRTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
Tamil Pandit
Jaffna
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வீரகேசரி

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது.

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM, No. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. III. புதுவை, தாது ஆவணி மீ உசுவ (10—9—36) NO. 39.

சுத்த சாதகம்

உலகினில்விடயவிச்சையையுடையோ
ணுணவதற்கேற்கவேகூட்டி
இலகிடப்புசித்தான்முயற்சிமேன்மேலு
மேறியேவளர்ந்திடுமதுபோல்
குலவிடும்வீட்டிலிச்சையேயுடையோன்
கோண்டதற்கேற்கவேயுணவை
இலகிடப்புசித்தான்முயற்சிமேன்மேலு
மேறியேவளர்ந்திடுமென்றே.

தமகுணப்புசிப்பேமயக்கத்தையளிக்குந்
தருமிராசதகுணப்புசிப்பே
மமதையையளிக்குஞ்சத்துவப்புசிப்பே
மயக்கமுமமதையுமகற்றி
அமலநல்லுணர்வேயளித்திடுமதனு
லவையிரண்டினுநசையகற்றி
நிமலசத்துவமேவருத்தனாக
நின்றுசத்துவப்புசிப்பருந்தும்.

உ

திருவருள் துணை.



காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதிய
ஞாலமுண் டானெடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலமுண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

வித்தகம்

புதுவை

தாது வரு ஆவணி மீ உசு உ

பிணி.

அநாதியான பாசமாய் அண்ட ரண்ட சராசரங்கள் அனைத்தையும் பிணித்து — பற்றி ஆட்டி அலைக்கும் பிணி என்னும் மருத்தை உரிய சாதகங்களால் நிறையுட் புகுத்தி,

அஃதாவது அப் பிணி என்னும் மருத்தை பிணியாகிய மருத்தினால் — மருந்தினால் மருந்தாகிய —மணி மந்திர ஔஷதமாகிய நன் மணி நாதத்தால் பிணித்து —நிறையுட் புகுத்தி,

பிணி என்னும் பாசங்கள் பற்றுக்கள் நீங்கி நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய இடைக்காடர் என்னும் பவரோக வைத்தியர்

திருவாய் மலர்ந்தருளிய

"மூவடி முப்பது"

என்னும் அரிய பெரிய தமிழ் மறையில்

"ஒழிபு"

என்னும் நான்காம் அத்தியாயத்தில் இரண்டாம் சூக்த மகுடமாகி மிளிர்வது.

"பிணி"

என்பது.

இதற்கு முந்திய சூக்த மகுடமாகிய

"தற்றுணை யாக்கம்"

"என்பது வித்தகம்" தொகுதி 3 இல. 38 இல் ஷை சூக்தம் முதலிய வாறு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப் பட்டது.

ஈண்டுப் "பிணி" என்பதன் பெற்றி ஷை சூக்தம் முதலியவாறு ஒரு சிறிது சுருங்கு உரைக்கப்படும்.

ஆசைப் பேறு அடிப்படை யாகப் பெற்ற உயரிய தடமாகிய காமாட்சி பீடத்தை அடையப் பெற்ற மெய்யடியார்,

தன்னிலையே முன்னிலை எனக் கண் கூடாகக் கண்டு,

ஆரோகண நெறியாகிய செந் நெறியில் உள்ளக் கிளர்ச்சியோடு செல்ல வல்லராவர் எனவும்,

கால் என்னும் வாசி வசப்படுதலால் கடவுளுக்கு அணுக்கராகி வதியும் பேறு பெற்ற ஞான்று,

நிவிர்த்தி மார்க்கத்தில் ஆரோகணம் பெறுதற்கண் "கடவுளே துணை என்பது போலக் கூப்பாடு போட்டுக் கொண்டு,

அக் கடவுள் துணையை நாடி நின்று ஊக்கம் குன்றித் தாமதிக்க வேண்டிய தில்லை எனவும்,

தற்றுணை யாக்கம் என்னும் மேலைச் சூக்தத்தால் கூறிப் போந்த புலவர் பெருமான்,

"பிணி"

என்னும் இச் சூக்தத்தால் உடலுயிரைப் பற்றி நிற்கும் பிணி என்னும் பாசமாகிய மருத்தை

நன்மணி நாதம் என்னும் அமல வாயு வடிவான பிணியால் பிணித்து

நிறையுட் புகுத்தி உய்தியடையும் பெற்றி கூறுகின்றார் என அறிதற் பாற்று.

மூவடிமுப்பது.

———

ஒழிபு. 4

பிணி—சூக்தம் 2.

புரிந்தகன் கழுவாய் புரியாது விலக்குணி
மருத்து நூன்மா ணுறுத்து நன் மணிபாம்
பிணியுமிப் புவியி னிலவுபான் மையதே.

என்பது சூக்தம்.

பிணி என்னும் மருத்தின் இயல்பும் அதனை மாற்றி நிறையுட் புகுத்துதற்குரிய நன்மணி நாதம் என்னும் அமலமான பிணியின் பெற்றியும் உணர்த்துதல் முதலிற்று இச் சூக்தம் என்க.

பிணி என்பது நிறை முறையில்லாத அருந்தல் பொருந்தல் என்னும் ஒழுக்கங்களின் காரியமாய் அவற்றிற்குப் பிராயச்சித்தமாகி அமைந்துள்ளது எனவும்,

மேல் அன்னதீய ஒழுக்கங்கள் நிகழ வொட்டாது தடுக்கும் அடைகல்

அனையது எனவும்,

மருத்து நூல்களாகிய வைத்திய நூல்களைச் சிறப்புறச் செய்யும் மணி அனையது எனவும்

உலகியலுக்கு ஒப்பிய எம் போலிய படிப்பாளிகள் பொருள் காணும் படியும்,

உண்மையை நாடும் ஆற்றலுடையார் அதனைக் குருவருளால் உணர்ந்து உய்தி யடையும் படியும் அமைக்கப் பட்டது இச் சூக்தம் என்க.

நிறை முறை யில்லா அருந்தல் பொருந்தல்களாற்றான் பிணிகள் உளவாகின்றன என்பது

பின் வரும்தேவர் திருவாக்கானும் நன்று வலியுறுதல் காண்க.

குறள்.

மிகினுங் குறையினு நோய் செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.
(ஷ 95-ம் அதி. மருந்து செ. 1)

[நூலோர்—வாய்மையான வைத்தியம் என்னும் வைதிக நெறி கண்டு அத்தகைய நூல்களை அருளிய சித்து மூர்த்திகளாகிய தத்துவப் பெரியார்.

"வளிமுதலா எண்ணிய' என்பதனால் வாயுவே முதன்மை உடையதென்பது பெற்றாம். இது முன்னர் விளக்கிக் கூறப்படும்.

அருந்தல் கூறப்பட்டவே அதனோடு தொடர்புடைய பொருந்தலும் அடங்கும்.

இழவறிந் துண்பான்க ணின்பம்போ [னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்.
(ஷ ஷ செ. 6)

தனது சரீர பௌதிக நிறையின் இறக்கத்தையும் ஏற்றத்தையும் அறியப் பெற்று,

அவை சமப்படுதற்கேற்ற உணவுகளை உண்ணும்மதிப்பொலிவுடையான் மாட்டு இன்பம் இடையறாது நிற்றல் போல,

நிறையும் இனமும் அறியாது அவாவினால் நேர்ந்தவாறு அளவு கடந்த உணவை உண்ணுவானிடத்துப் பிணி என்னும் நோய் இடையறாது நிற்கும் என்பது இதன் பொருளாகும்.

இழிவு எனவே ஏற்றமும் உய்த்துணர வைக்கப் பட்டது.

சரீர பௌதிக நிறை யறிந்து ஏற்ற உணவை அருந்து வோர் இடையறா இன்பம் எய்தி நிலை பெறுதலும்,

பல சென்மங்கட்கு வித்தாய் விளங்கும் அவாவினால் நேர்ந்த வாறு இஷ்டம் போல அருந்துவோர் நோய் வாய்ப் பட்டு விரைவில் சாக்காடு அடைதலும் இதனால் வலியுறுத்தப் பட்டன.

பிணியை அடைதலே — நோயை அநுபவித்தலே

"புரிந்த தன் கழவாய்"

ஆகும். நிறை முறை இல்லா ஒழுக்கங்களுக்குத் தீர்வு —பிராயச் சித்தம் ஆகும்.

பிணிவாய்ப் பட்டோர் தமது நிறை முறை இல்லாத அருந்தல் ஆதியனவே பிணிக்குக் காரணம் என்பதனைக் கண் கூடாகக் கண்டு மேல் நிறை முறை தழுவி — பத்தியங் கொண்டு ஒழுகுவர்;

ஆதலால், அப் பிணியே அன்னதீய ஒழுக்கத்தைத் தடுக்கும் அடைகல்லும் ஆகின்றது.

இது பற்றியே

"புரியாது விலக்குணி"

என்று கூறப்பட்டது.

இவ்வாறு பிணி என்னும் நோய் உலகில் நிலவுதலாற்றான் —சீவர்களைப் பற்றி நிற்றலாற்றான் உலகில் வைத்திய நூல்கள் சிறப்படைகின்றன; பலராலும் போற்றப் படுகின்றன. பலரும் அந் நூல்களைப் படித்துப் பொருளும் பூசையும் பெறுகின்றனர். இது உலகியல்.

இது பற்றியே, பிணி,

"மருத்துநூல் மாணுறுத்து நன் மணி"

எனவும்,

'இப் புவியில் நிலவு பான்மையதே"

எனவும் உலகியலுக்கு ஒப்பியவாறு கூறப்பட்டது எனக் கொள்ள ஆம்.

இச் சூக்தத்துக்கு உலகியலுக்கு ஒப்பியவாறு உரை கண்ட பண்டை ஆசிரியர் கூற்றையும் இயைபு பற்றி ஈண்டுக் காட்டுதும்:—

"க.—பொறி யுணர் நுகர்வே பெரிதுடைய ராயினார் வேட்கையான் உந்தப் பட்டு நெறிவிலங்க அத்தால் நேர்ந்தன பிணிப் பீடிப் பாற் பிராயச் சித்தமா வாக்கிக் கோடல்."

"உ.—தீமைப் பயப்பன விழைக்காமே எதிர் காலத்து அன்னோர் நேர் வழி நிற்க அடைகல்லாகி நிற்றல்."

"3.— தீர்க்க வொண்ணாத வற்றையும் தீர்ந்த வற்றின் பயன் நோக்கிப் பிணியின் தொடக்க நடு வீற்றினை ஒப்பு நோக்கித் தீர்க்கும் மருத்துவ நூற்பழக்க வழக்க முறை நோக்கிப் பல்கி வருதல்."

பின் வருவன இந் நூற் பதிப் பாசிரியர் குறிப்புரை:—

'பிணியை ஆசிரியர்,

"புரிந்த தன் கழவாய் புரியாது விலக் குணி
மருத்து நூன் மாணுறுத்து நன் மணி"

"யென மூன்று பொருளுறச் சொற் பெயர் மூன்றமைத்துக்கூறி வைத்தமை காண்க."

"இம் மூன்றனுள் முதலாவதான

"புரிந்த தன் கழுவாய்"

"என்பது புரியொணாதன புரிந்த வற்றுன் வந்த பிணி. புரியொணாதன புரியாமை கொண்டு நிற்றலே உணர்த்திய வாறு காட்டியதா மென்க."

"இரண்டாவதான

"புரியாது விலக்குணி"

என்பது மேற் கூறியவாறு புரியொணாதன புரிந்ததனு னேர்ந்ததை மேலும் புரியாது விலங்கிச் செல்லுமாறு விலக்கி நிற்றலே உணர்த்தியதா மென்க."

"மருத்து நூன் மாணுறுத்து நன் மா [மணி"

"என்பது மனிதரது உயிர் வாழ்விற்கு இன்றி யமையாதது உடம்பே யாமென் பதும் அவ் வுடம்பும் தளராது வளரக் காத்து வருதல் முறைமையானே உயிருங் காக்கப் பெறுவதாயின் நீள இருந்து வருதலினலும் உடம்பழிய நேர்வது பிணி யாலே யாகலானும் அந் நேர்ச்சியில் உயிரும் போய் விடுதலினலும் அவ் வுயிர்க் காப்புக் கின்றி யமையா நூலாகி நின்றது மருத்து நூலாகலானும் அந் நூலும் நில நீர் காற் றிவற்றின் அல்லாதன செய்த கேட்டாலும், உணவிடை வந்த கேட்டாலும் கெட்ட வுணவின் வந்த வூனின் கேட்டாலும் கேடமைந்த வூனினின்று தோன்றிய வுள்ள த்தின் கேட்டாலும் ஆகியது பிணியா மென்பதை வலியுறுத்தலே மேற் கொண்டு பிணிக்கு மருந்து கூறிப் போவதாலும் மனிதர் உள்ள காலங்காறும் பிணி யுண்மை காண நிற்றலான் யாவரும் போற்றப் படுவ தாகியது மருத்து நூலென்பது வெளிப் படை யாகலானும் பிணி மேம்பாடுற நின்ற மருத்து நூல், அரிய வைத்த நன் மா மணி பிணியா மென்பதை உய்த் துணர்ந்து கொள்க."

"பிணியு மிப் புவியில் நிலவு பன்மை [யதே"

என இச் சூத்திர வீற்றடி கூறிப் போந்தமையால் மேற் கூறிய மூன்றும் இப் புவியின் கண் யாண்டும் நிலவுவதாம் பான்மை யுடைத்து என்பதை உய்த்துணர வைத்தமை காண்க.

3. —அசாத்திய நோயெனினும் அவற் றையும் முன் தீர்த்துக் கண்ட பயனேக்கி பிணி தொடக்கத் தற்றவாறும் இறுதியில் இத் தனேத்தென வானவாறும் மருத்து நூலிற் கண்ட நோய் வரலாற்றிற் கொப்பக் கண்டு நாடி யியல்பு முதலியவற்றுல் இற்றுகு மென வுறுதி பெறக் கொண்டு நோய் தீர்க்கு மருந்து ஈதாகுமெனவே துணிந்து செய்முறை கைமுறை யாகிய வழக்க நெறி நின்று கண்ட மருந்தினை நீக்கம் நிறைப்பு ஒப்பு ஓர்ந்து கொடுத்து வருதலினுல் என்பதாம்."

"இம் மருந்து:—தேவுறை, மக்களுறை சூருறை என மூன்றனுள் அடங்கு மென்ப தாம்"

இவை உலகியலுக்கு ஒப்பிய பொருள்.

மேல் இச் சூத்தத்தின் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறப்படும்.

1

(பிணி)புரிந்ததன் கழுவாய்

2

புரியாது விலக்குணி

3

மறுத்து நூல் மாணுறுத்தும் நன் மணி [யாம்.
(ஆதலால்) பிணியும் இப் புவியில் [நிலவு பான்மையதே

அ

ஈவு ஏற்புக்களே நிகழ்த்தும் வாயு வானது அவற்றுலாகும் பிணியாய் அவற்றிற்குக் கழுவாய் ஆகியும் தனே புரிகின்றது.

ஆ

அவ் ஈவு ஏற்புக்களேத் தடுக்கும் அடை கல்லாயும் நிற்கின்றது.

இ

அம் மட்டோ! மருத்து என்னும் தனது இயக்கமாகிய நூல் என்னும் ஒழுங்கை—நடை அடை அசைவை நிறையுட் புகுத்தி உய்தி யடையச் செய்வதாயும் உள்ளது.

ஆதலால் மருத்து எனப்படும் அப் பிணியானது இப் புவியில் அநாதி யாகவே நின்று நிலவும் முறைமை யுடையது என்பதாம்.

மேல் இவ் உண்மைப் பொருள் சிறிது விளக்கமுற உரைக்கப் படும்.

"பிணி" என்னும் இச் சூத்தம் சிறிது விஷமமாய் அமைக்கப் பட்ட தே. பிணி என்பது எஞ்ஞான்றும்—யாண்டும் இப் புவியில் நிலவும் பான் மை யுடைத்தாம் எனக் கூறுகின்றனர் ஆசிரியர்.

பிணி என்றல் என்னே? அது தான் ஒன்று மற்றொன்றைப் பிணித்துக் கொள்வது—பற்றிக் கொள்வது எனப் பொருள் படும்.

ஆதலால் பிணி என்பதும் பாசம் என்பதும் ஒன்றே எனல் ஆம்.

பாசமாகிய பிணி அநாதி. அஃது எஞ்ஞான்றும் யாண்டும் இப் புவியை —புவி என்னும் தாவர சங்கமத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் தன்மை உடைய தென்பது ஆசிரியர் உள்ளக் கிடக்கை.

ஆதலாற்றுன் சூத்தத்தின் இறுதி யாகிய மூன்றுவது அடியில்,

"பிணியும் இப் புவியில் நிலவு பான்மையதே"

எனத் தந்திரமாகக் கூறிப் போந் தனர்.

சூக்தத்தின் முதல் இரண்டு அடிகளால் பிணி என்பது இன்னது எனவும் அப் பிணியைப் பிணிக்கும் பிணி இன்னது எனவும் மிக அருமையாக — நுட்பமாக எடுத்துக் காட்டுகின்றார்.

வாயுவே பிணி எனப்படுவது.

வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூன்று நாடிகளுள் தலையாயது வாதம்.

அதுவே வாயு. உபய பூதமாகிய வாயுவே ஆதி என்க.

பின் வரும் வைத்திய நூற் பிரமாணங்களும் இவ் உண்மையை நன்று வலியுறுத்துவன வாகும்.

அகத்தியர் பாடல்.

"வாத மேராசனும் வண்பித்தம் மந்திரியாம்
சேதக் கொலைஞன் சிலேற்பனமாம்
....."

தேரையர் பாடல்

'ழவர் படைக்கு முறைமை கேண்மின்
நாபியின் கீழ் நடமிடும் அரசு
கண்டத் தடியே காணும் அமைச்சு
உச்சிக்குக் கீழ் உலவு சேனாதிபதி.
....."

[அரசு எனப்பட்டது வாதம். இதுவே வாயு. நாபியின் கீழ் மூலாதாரத்துள்ள மூல வாயு அசுத்த மடைதலாற்றான் பிணி ஆக்க முறுகின்றது.

அமைச்சு—பித்தம். சேனாதிபதி—சிலேத்துமம்.]

பதினெண் சித்தர் நாடி சாத்திரம்.

வாதமான தேவனே யாதியாகி நின்றவன்
வாதமான தேவனே வையக மமைத்தவன்
வாதமான தேவனே யறுதொழில் வகுத்
[தவன்
வாதமான தேவனே வன்மை கண்டு
[கூறுமே.

(சிவவாக்கியர்)

["அறு தொழில்" என்பதில் ஈவு ஏற்பு என்பன அடங்கும். ஈவு ஏற்பு என்னும் இயக்கம் வாயுவால் நிகழ்தல் இச் செய்யுளாலும் வலியுறுதல் காண்க.]

பரராச சேகரம்.

வாதமே முதலா நாடி வாதமே தூல காயம்
வாதமே பெலவானாகும் வாதமே யழலை
[வேண்டும்
வாதமே மந்தம் பற்றும் வாதமே சீதகாலம்
வாதமே யுடற் குளிர்ச்சி வாதமே
[மூலமாமே

(ஷை வாத ரோக நிதானம். செ. 21)

[வாதமே நாடிகளுள் முதன்மையானது. அதுவே வாயு.

குறள்.

"நூலோர் வளி முதலா எண்ணிய
[மூன்று."

எனத் தேவர் கூறியதும் அறிக.

வாயுவால் ஆக்க முற்றது—வாயுவால் நிலைப்பது — வாயு வின்மையால் அழிந்து படுவது—வாயு அமல மடைதலால் நாத சரீரமாய் நித்தியத்துவம் பெறுவது இவ் உடம்பு.

ஆதலால் "வாதமே தூல காயம்" எனப் பட்டது.

"வேதத்தின் ஒத்த உடல்"

என அண்ணல் திருமூலர் அருளியதும் அறிக.

வகரம் என்னும் வாயுவில் உள்ள ஏதத்தை— தடிப்பாகிய களிம்பை— அழுக்கை நீக்குதற் குரிய உபாயங்களைச் சமக்கினை யாகக் கூறும் நூல்களே வேதம் (வ + ஏதம் = வேதம்) என வழங்கப் படுகின்றன.

வைத்திய நூல்கள் ஆயுர் வேதம் எனப் படுவதும் ஈண்டு நோக்கற்பாலது.

ஆயு என்பதன் மரூஉவாயு.

வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவன யாவும் இப் பெற்றி வாய்ந்தனவே ஆகும்.]

வாதமே வாயுவாகும் வாதமே காலிற்
[சேரும்
வாதமே சன்னியோடு மருவிடில் வலியு
[முண்டாம்
வாதமே விடியப் பத்து வாதமே சாயங்
[காலம்
வாதமே புளிப்பு வாங்கும் வாதமுந்
[தளர்ச்சிகாலம்.

(ஷை ஷை செ. 22)

தச வாயுக்களும் சமப்படாது நிறைமுறை யின்றி இயங்குத லாற்றான்— அசுத்தம் அடைதலி னாற்றான் நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டு என்னும் கணக்குள்ள நோய்கள் உடலகத்து ஆக்க முறுகின்றன என்று வைத்திய நூல்கள் கூறுகின்றன.

(வைத்திய விளக்கம் செ. 24—30)

இவ்வாற்றால் ஈண்டுப் "பிணி" எனப் பட்டது மருத்து என்னும் வாயுவே என்பது நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

"புரிந்த தன் கழுவாய்" :—

வாயுவின் தொழிலாகிய ஈவு ஏற்பு உண்மையால் இயங்குகின்றது—நிலவுகின்றது இவ் உலகம்.

'ஏமன், ஈவேற் புண்மையான் இவ் உல
[கியக்கலின்"

என்பது மூவடி முப்பது. (பொருட் கூறு-சூக்தம் 6.)

ஈவு ஏற்பு என்பன அருந்தல் என்னும் பயில்வில் — அருந்தல் பொருந்தல்களில் அடங்கும்.

உணவு என்னும் அருந்தலால் சரீர பௌதிக நிறை பேதித்தல் — தன் இயலில் நின்றும் திரிதல் கண்கூடு.

இருவினை சொரூபமாகிய உடலுயிர் — சத்துச் சித்து முன்னிலை யாகிய உணவைக் கொள்ளுகின்றன — ஏற்கின்றன. இதனால் இவற்றின் நிறை பொலிவடைதலும் மெலின மடைதலும் உளவாகின்றன.

கொடுக்கல் வாங்கல் என்பன உலக இயற்கை. இவை இல்லாவிடின் கழுவாய் என்னும் தீர்வு இல்லை.

ஈவு ஏற்பு என்னும் இவ் இயக்கம் வாயுவால் ஆயது.

"வாயுவான தேவனே அறுதொழில்வகுத்
[தவன்"

என்பது வைத்திய நூல்.

இவ் வாயுவே—வாயு தேவனே ஈவு ஏற்புக்களால் இவ் உலகை இயக்கும் "ஏமன்", எனப்பட்டவன். (மூவடி முப்பது—பொருட் கூறு—சூக்தம் 6)

அப்பர் தேவாரம்.

என்னிலாருமெனக்கினியாரிலை
என்னிலுமினியானொருவன்னுளன்
என்னுள்ளேஉயிர்ப்பாய்ப்புறம்போந்து
[புக்(கு)
என்னுள்ளேநிற்கும்இன்னம்பரீசனே.

என்னும் பிரபல சுருதி உடலுள் உயிர்ப்பாய் வாயு வடிவாய் நிற்பவன் ஏமனாகிய பொன வண்ணனே என்பதனை நன்று வலியுறுத்துதல் காண்க.

பின் வரும் பிரமாணமும் வாயு என்னும் வாசி ஈசனே என்பதனை நன்று வலியுறுத்துதல் காண்க.

போகர் 7000.

வாசி யோகம்.

வெளியான வாசியைத்தான் வரவழைத்து
வீட்டுக்கு ளங்கங்கே வைத்திட்டுத்தான்
தனியாக வைத்திட்டுச் சாதித்தாக்கால்
சாதித்து வாசியும் ஈசனும்ஒன்றாகும்
வளியான வாசியைப்போற்சித்தொன்று
[மில்லை
மாசித்து சிவனவனும் வாசியொன்றில்
ஒளியான வாசியது உயிரை மீட்கும்
உறுதியாஞ் சிவயோகத் துண்மை
[தானே.

(ஷை 1-வது காண்டம்-செ.102.)

வாயுவே கழுவாய்த்குத் துணையாயும் அக் கழுவாய்க்கு அடை கல்லாகவும் விளங்குவது.

எங்ஙனம்?

*இயக்க நிறை பேதத்தால் என்க. அவ்வாயுவே மருத்து எனப்படுவது.

அவ்வாயுவே பிணி என்பதில் ஏதப்பாடுண்டோ?

அதுவே அண்டரண்ட சராசரங்களையும் பிணித்து—பற்றி ஆட்டுகின்றதென்பது கண் கூடு ஆதலால் என்க.

நிறை முறை யில்லா ஈவு ஏற்புக்களால்—அருந்தல் பொருந்தல்களால் பிணி உளவாகின்றது. அப் பிணியே அன்ன ஒழுக்கத்துக்குக் கழுவாயும் ஆகின்றது.

கழுவாய் என்றால் பிராயச் சித்தம் என்ப. பிராயச் சித்தம் என்றால் உலகத்தில் வேதாக மாதிகளால் விதிக்கப் பட்டதெனக் கண்டு சீவர்கள் பலராலும் தங்கள் தங்கள் திரிபுணர்ச்சியால் உளுற்றப்படும் சில கிரியைகளைக் குறிக்கின்றது எனின்,

இது உலகியலுக்கு ஒப்பிய வழக்கே யன்றி வேறன்று.

இன்னோரன்ன கிரியைகள் வாய்மையை உணர்தற்குச் சாதகமே யன்றி வாய்மை ஆகா.

புலவர் பெருமான் வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகியவர் ஆதலால் அவர் வாக்கியங்கள் எல்லாம் தத்துவார்த்தங்களை உடையனவும், கண் கூடாக—பிரத்தியட்ச மாகக் காணப்படுகின்றன வற்றையே குறிக்கின்றனவும் ஆம் என்பது வெள்ளிடை மலையாம்.

ஆதலால் சீவராசிகள் அனைத்திற்கும் கழுவாய் இன்றி நிலையும் பெற்றி கைகூட மாட்டாது.

இயற்கை முறையான — வாய்மையான அத்தகைய கழுவாய் யாது கொல்? எனின்,

அது தான் சீவாதாரமான மலம் சலம் சுக்கிலம் என்று கூறத் தகும்.

இம் மூன்றும் ஒரு சீவனுக்கு நிறை கொண்டு இயங்காவிடின் அச் சீவன் பிணியால் துன்புறுதல் இயற்கையே — இயல்பே.

இஃது எவராலும் மறுக்கமுடியாததே.

இவையே சீவனுக்கு உபாதி எனப் பட்டன.

பின் வரும் பட்டினத்தடிகள் திருவாக்கும் இவ் உண்மையை நன்று வலியுறுத்துதல் காண்க.

பட்டினத்தடிகள் பாடல்.

காலை யுபாதி மலஞ்சலமா மன்றி கட்டுச்
[சியில்
சால வுபாதி பசிதாகமா மற்றைச்
[சஞ்சிதமாம்
மாலை யுபாதி துயில் காம்மா மிவை
[மாற்றி விட்டே
ஆல முகந்தரு ளம்பலவா வெனை
[ஆண்டருளே.

மாற்றுதல் — நிறை முறையோடு இயங்கச் செய்தல். நிறை முறையான ஈவு ஏற்புக்களால் — அருந்தல் பொருந்தல்களால் இவ் உபாதி நீங்க வேண்டும்.

* வாயுவே நிறை தவறி இயங்கலால் நோயும் நிறை தழுவலால் கழுவாயும் ஆகின்றது என்பது பொழிப்பு.

இவ்வாறு உபாதி ஒழிதலே மல பரிபாகம் என்பது. இதுவே கழுவாயின் பயன் என அறிதற்பாற்று.

பின் வரும் சேந்தனூர் திருவாக்கும் கொடுத்தல் கொள்ளல் என்னும் ஈவு ஏற்புக்களால் உளவாகும் கழு வாயால் அடிமைத் திறம் சித்திக்கப் பெறுதலே நன்று வலியுறுத்துதல் காண்க.

திருப்பல்லாண்டு.

———

மிண்டு னத்தவர்போமின்கள்மெய்யடி
[யார்கள்விரைந்துவம்மின்
கோண்டுங்கொடுத்துங்குடிகுடிபீசற்காட்
[செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருள்அளவில்லதோர்
[ஆனந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்
[றேபல்லாண்டுகூறுதுமே.
(ஷை கோயில் பண். பஞ்சமம் பாசுரம்-2)

நிறையுட் புகுத்தப்பட்ட— இயக்க நிறை மாறிய வாயுவே இத் தகைய கழுவாய்க்குத் துணையாவது.

இவ்வாற்றால்,

"புரிந்த தன் கழுவாய்"

என்பதன் பொருள் ஒருவாறு சுருங்க உரைக்கப்பட்டமை கண்டு கொள்க.

"புரியாது விலக்குணி"

ஈவு ஏற்புக்கள் நிகழாத வாறு தடுப்பதும் பிணி என்னும் — மருந்து என்னும் வாயுவே ஆம்.

ஈவு ஏற்புக்களால் கழுவாயை நிகழ்த்துதற்கும் அவ் ஈவு ஏற்புக்களைத் தடுப்பதற்கும் வாயுவின் இயக்க நிறை பேதமே காரணமாகும்.

வாயு அமல மடைந்து உடலில் உறையப் பெற்ற போது ஈவு ஏற்புக்கள் நிறை முறையோடு நிகழும். நிகழ்ந்தும் நிகழாதனவே.

கைத்த இல் தக்க இல்லாக மாற்ற மடைந்த போது அமல வாயு வடிவான அமல நாதங்கள் உடலுயிரை நாத மயமாக்கிய போது ஈவு ஏற்புக்கள் நிகழமாட்டா என்று கூற ஆம்.

ஏன்? கொடுத்தும் கொடாததே. கொடுத்த அளவு குறைந்த பாடு இல்லை ஆதலால் என்க.

"புரியாது விலக்குணி"

என்பதன் பொருள் இதுவே ஆம்.

மருத்து நூல் மாண் உறுத்து நல் மணி ஆம்"

மருத்து என்னும் வாயுவைச் சீர் பெறச் செய்து — வாயுவின் நூல் என்னும் ஒழுங்கை மாண்புறச் செய்து — வாயுவின் நடை அடைவாகிய அசைவை நிறையுட் புகுத்தி உய்த்தியடையச் செய்வது

"நன் மணி நாதம்"

என்னும் "பிணி" என்று கூறுகின்றார் புலவர்.

"நன் மணி நாதம்" என்னும் பிணியே மருத்தைப் பிணிக்கும் பிணி என்க. காலனுக்குக் காலன் என்புழிப் போல.

காலம் என்னும் காலனை கால் என்னும் காலால் பிடிக்க வேண்டும்— பிணிக்க வேண்டும் — வெல்லுதல் வேண்டும் என்பதன் உண்மையும் இதுவே ஆம்.

திருமந்திரம்.

———

ஏற்றியிறக்கியிருகாலும்பூரிக்கும்
காற்றைப்பிடிக்குங்கணக்கறிவாரில்லை
காற்றைப்பிடித்துங்கணக்கறிவாரார்க்குக்
கூற்றையுதைத்துங்குதறியதுவாமே.
(ஷை 3-ம் தந். பிராணாயாமம் செ. 8)

என அருளிச் செய்தார் அண்ணல் திருமூலர்.

உரிய சாதகங்களால் வாயு அமல மடைந்து உடலில் உறையப் பெறுதலே "காற்றைப் பிடித்தல்"—பிணித்தல் என்க.

இதுவே வாய்மையான பிராணாயாமம்; வாயுவைத் தடுத்தல் என்பது.

மூச்சை வலிதின் அடக்குதல் பிராணாயாமம் ஆகாது.

இது பிராணன் ஆபாமம் பெறுது காலத்தில் சரீரம் பிணமாகப் புறப் பட்டுப் போதற்குரிய அவயோகமே யன்றிச் சிவயோகமாகாது எனவறிக."

அசுத்த நிறையே—அசுத்த வாயுவே காலன்.

அமல வாயு வடிவான அமல நாதமே—நன் மணி நாதமே — காலே— எம் பெருமான் திருவடியே காலனைப் பிணிப்பது—உதைப்பது— வெல்வது என்க.

அமல வாயு வடிவான நன் மணி நாதம் உடலுள் முழங்குங் காலமே காலன் பிணிக்கப் படும் காலமாகும்.

அப்பால் இத்தகைய அமல நாதம் உடலில் ஒடுங்குங் காலமே எம் பெருமான் உடலில் பூரணமாய்க் குடிபுகுங் காலமாகும்.

சீவன் முத்தி நிலை பூரணப் பட்ட காலம் —ஓ வடிவம் பெற்ற அவசரம் இதுவே ஆம்.

இவ் அரிய பெரிய உண்மையையே பின் வரும் திருவாக்கால் வெளிப் படுத்தி யருளியது மணிவாசக சிவம் என அறிக.

திருவாசகம்.

———

என்னணியார் முலையாக மலைந்துட
[னின்புறுமாகாதே

எல்லையின் மாக்கரு ணைக்கட லின்றி
[னிதாடுது மாகாதே
நீன்மணி நாத முழங்கியெனுள்
[ளுற நீண்ணுவ தாகார்த்த
நாத ணணித்திரு நீற்றினே நித்தலு
[நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரி லென்பணி முந்துற
[வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம்
[வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மல ரென்
[றலை யெய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானரு ளீசன்
[எழுந்தரு ளப்பெறிலே.

(ஷி திருப் படையாட்சி—செ.4)

நன் மணி நாதம் என்னும் பிணியே மருத்தை நிறையுட் புகுத்துவது.

அமல மடைந்த பிணியே — வாயுவே —மருத்தே மருந்து; பிறவிப் பிணிக்கு மருந்து.

அதுவே அமுதம் — அருளமுதம் —சாம கானம்— சாம வேதம் —வாய்மையானவேதம்.

அமல மடைந்த மருத்தே வாய்மை யான மருந்து; அரு மருந்து.

எம் பெருமான் வடிவமாகிய இவ் அரிய பெரிய மருந்தின் மாண்பையே பின்வரும் பிரபல சுருதியால் போற்றிப் புகழ்ந்தார், இம் மருந்தை அருந்தி நித்தியத் துவம் பெற்ற எமது முத்துத் தாண்டவப் பெருமான்.

ராகம் மோஹநம் —ஏக தாளம்.

பல்லவி.

அருமருந்தொருதனிமருந்—தம்
[பலத்தேகண்டேனே

அநுபல்லவி.

திருமருந்துமைபாகமருந்துதில்லே — யம்ப
[லத்தாடுமருந்து
இருவினைகளறுக்குமருந்து
எழையடியார்க்கிரங்குமருந்து [அருமரு...

சரணங்கள்.

(1) கொன்றைதும்பையணிந்தமருந்து
கோவைமீதிற்படர்ந்தமருந்து
மன்றுளேநின்றுமெருந்து
மாணிக்கவாசகர்கண்டமருந்து [அருமரு

(2) இந்திரானவர்வானவர்தாமு
மிருடிகள்தமக்கெட்டாமருந்து
சந்திரசூரியர்காணுமருந்து
தானேமூலத்துத்தழைத்தமருந்து
[அருமரு...

(3) திரித்திதித்திதியென்றுமெருந்து
தேவாதிமூவர்கள்காணுமருந்து
கருத்தைத்திருத்தியிருத்துமருந்து
காலனைக்காலால்உதைத்தமருந்து
[அருமரு...

(ஷிகீர்த்தனம் 37)

[அம்பலம்—சிதம்பரம்-ஞானாகாசம். "திரித்திதித்தி யென்றுமெருந்து" என்பது அமல மான மருத்தே அமல நாதமாகிய எம்பெருமான் திருவடி என்பதனைநன்று புலப்படுத்துகின்றது.

தெய்விகம் திகழும் அருள் வாக்காகிய இவ் இசைப்பா அரிய வேத வுண்மை பொதிந்துள்ளது.

பொருள் விரிப்பின் மிகப் பரக்கும்.

திருவாசகத் துள்ள "கண்டபத்து" என்னும் பதிகப் பொருளும் இதுவே ஆம்.]

ஆதலால் கழுவாய் நேர்மை யுறுதற்கு மருத்து நேர்மை யுறவேண்டும்.

அம் மருத்து நேர்மை யுறுதற்கு — மருத்தை நிறையுட் புகுத்தி அதன் இயற்கையான அமைப்பை —நூல் என்னும் ஒழுங்கை மாற்றிச் சீர்பெறச் செய்வதற்கு

"நண் மணியாம் பிணி"

வேண்டற் பாலது என்க.

இவ்வாறு பிணி என்னும் மருத்தானது திரோதானமாய் பிரவிருத்தி முகமாகவும் ஈவு ஏற்புக்களே நிகழ்த்திக் கழுவாய்க்குத் துணையாயும் அடைகல்லாயும் அருளமுதமாயும் —அருளாயும் மாற்றமடைந்து நிவிர்த்தி முகமாகவும் அநாதியாய் என்றும் நின்று நிலவுவது பற்றியே

"பிணியும் இப் புவியில் நிலவு பான்மையதே"

என்று கூறி இச் சூக்தத்துக்கு முற்றுத் தந்தனர் புலவர் என அறிதற் பாற்று.

மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் ஒழிபு என்னும் நான்காம் அத்தியாயத்தில் இரண்டாம் சூக்த மகுடமாகிய "பிணி" என்பதன் பண்பும் பயனும் ஷி சூக்தம் முதலியவாற்றுன் ஒருவாறு உணரதக்கும்.

சுபம்.

தமிழன்பர்களுக்கு

ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின்
நூல்களைப் படித்து
ஆனந்த மடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)	ரூ. 12-8-0
2.	வசனங்கள், (6பாகங்கள்)	2-0-0
3.	கதைக்கொத்து	0-8-0
4.	பகவத் கீதைபகுதி	0-8-0
5.	கட்டுரைகள் 1 தத்துவம்	0-10-0
	,, ,, 2 மாதர்	0-8-0
	,, ,, 3 கலைகள்	0-8-0

6. Bharathi and his Works by Mr. C. Visvanathan Brother of Bharathi 0—4—0

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

Imprimerie "VITTAGAM" — Pondichéry. Le Directeur-Gérant.RNagarattinam.

1301

திவாசக உண்மை

யாழ்ப்பாணம், தென்கோவை தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை

(வித்தகம் பேராசிரியர்)

அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும். மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0—2—9 அஞ்சு தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்

புதுவை.

TOWARDS TRANSCENDENCE.

Vedanta Kesari Madras, Writes:—

"The book speaks of undiscovered possibilities hidden in the deeper reaches of the mind which could be brought into the conscious plane by a process of Transcendance of the various lower planes by which man become the superman possessed of great psychic powers, and later emerges with a still higher order of consciousness, as a Divine Personality."

Price As. 12.

Nandhi Publishing House

PONDICHERRY.

BOOKS BY SRI AUROBINDO

Essays on the Gita			
First Series	...	5	8
Second Series	....	7	8
Isha Upanishad	....	1	0
Ideal and Progress	...	1	0
War and Self – Determination	....	2	0
The Renaissance in India	...	1	12
The National Value of Art	....	0	8
Uttarapara Speech	....	0	4
Kalidasa	....	1	0
The Yoga and its object	....	01	2
The Mother	....	1	0
The Ridde of this World	....	2	0
The Teaching and the Asram of Sri Aurobindo	....	0	10
Songs to Myrtilla	....	1	4
Baji Prabhu	....	0	10
Six Poems of Sri Aurobindo	....	1	4
Lights on Yoga	....	1	4

NANDHI PUBLISHING HOUSE

இனும்!

சுத்த சாதகம்

வேண்டுவோர் தபால் முத்திரை சலவுக்கு உரிய 6 சதம் அல்லது 1 அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இனும்!!

ஜல வைத்தியம்

வேண்டுவோர் 6 அணு தபால்முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம். புதுவை.

Imprimerie "VITTAGAM" -- Pondichèry Le Directeur-Gérant. R. Nagarattinam.